1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கெனவே 5, 6 மருத்துவ மனைகளிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மேலும் 5, 6 இடங்களிலே சித்த மருத்துவம் விரிவுபடுத்தப்படும்.

சென்னை அரசுப் பொது மருத்துவ மனை

*577 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அரசாங்க பொது மருத்துவ மனையினை மேலும் விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எந்தெந்த வகையில் சென்னை அரசாங்க பொது மருத்துவமனை விரிவுபடுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை பொது மருத்துவமனை தலைமை மருத்துவமனையில் சில பகுதிகள் ஏற்கெனவே உயர்த்தப் பட்டிருக்கின்றன. உயர்த்தப்படுவதும் விரிவுபடுத்தப்படுவதும் ஒன்றுதான். "நியூராலஜி, கார்டியாலஜி" பகுதிகளுக்காக ஏற்கெனவே பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு கேன்ஸர், லெப்ரஸி, டி.பி. பெட்ஸ் அமைப்பதற்காக 4 லட்ச ரூபாய் செலவில் வார்டுகள், கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைத்தவிர, சென்ட்ரல் ஜெயில் பகுதியிலிருந்து ஒரு பகுதியை எடுத்துச் கொள்ளலாமா என்ற ஆலோசனை இருந்தது. ஆனுல் அது முழு அளவுக்குச் செம்மையாக நிறைவேறுமா என்ற ஐயப்பாடு இருந்த காரணத்தினுல், இந்த விரிவுத் திட்டம் இப்பொழுது கைவிடப் பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், அரசாங்கப் பொது மருத்துவ மனையிலே பிரிவுகளை விரிவுப்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பற்றித்தான் அமைச்சர் அவர்கள் சொன்னதாகக் கருதுகிறேன் அங்கே தினசரி நோயாளிகள் படுக்கை அல்லாமல் கீழே படுத்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்களுடைய பிரச்னையைப் போக்க படுக்கைகளை அதிகப்படுத்துவதற்குச் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 20

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு மருத்துவமனையிலே சிறப்புப் பகுதிகளை அதிகப்படுத்தும்போது பொதுப் பகுதியையும் விரிவாக்குவது என்பது இடவசதி காரணமாக இயலாது. தலைமை மருத்துவ மனையிலே சிறப்புப் பகுதிகளை விரிவு படுத்தியிருக்கிறோம். ஸ்பெஷல் பிரான்சஸ் ஆப் மெடிஸனுக்காக விரிவுபடுத்தும்பொழுது பொதுப் பகுதியைப் போதிய அளவுக்கு விரிவுபடுத்த முடியாத காரணத்தினால், மற்ற நோயாளிகளுக்கு வேறு இடங்களிலே சிகிச்சை தருவதற்கு ஏற்பாடுகள் செய்வதுபற்றிக் கவனிக்கலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will the Government think of improving the Nephralgy Department in the General Hospital?

THE HON. THIRU K. ANBAZHAGAN : A proposal is under consideration.

கோழி வளர்ப்பு

*578 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் வேலை வாய்ப்புத் திட்டத்தை அதிகரிக்கக் கட்டாய கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்புத் திட்டத்தை அமுல் செய்ய அரசிடம் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் ஊராட்சிமன்றங்களின் மூலமாக கோழிப்பண்ணை வைக்கவும், பன்றி வளர்க்கவும் அரசாங்கம் உற்சாகம் காட்டியதே, அது தொடர்ந்து செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கோழி வளர்ப்புத் திட்டம், பன்றி வளர்ப்புத் திட்டம் ஆகியவை பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகவும், கால்நடைத் துறையின் மூலமாகவும் கிராமப் பகுதிகளில் பரவலாகச் செய்யப் பட்டு வருகிறது. ஆனால் கேள்வியில் கேட்கப்பட்டிருப்பது கிராமங் களில் வேலை வாய்ப்புத் திட்டத்தை அதிகரிக்கக் கட்டாய கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்புத் திட்டத்தை அமுல் செய்ய அரசிடம்